1992 மார்ச் 13]

ரிடத்திலே இருக்கிறது. ஒரு வார காலத்திற்குள், அந்தக் கோப்பு வந்தவுடன், உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேறும் என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 205, திருமதி அ.தி. சரஸ்வதி; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்,

அரேப்பாளையத்தில் அணை

205—

*3452 திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தாளவாடி அரேப்பாளையத்திலிருந்து மேற்கு நோக்கி ஓடும் பள்ளத்தாக்கு நீரைத் தடுத்து அரேப்பாளையத்தில் ஒரு அணை கட்டி அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தி மின்சாரம் எடுக்கவும் சத்தியமங்கலம் பகுதிகளுக்கு பாசனத்திற்குப் பயன் படுத்தவும் 1983–84ஆம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாளவாடி அரேப்பாளையத்தில் மேற்கு நோக்கி ஓடும் நீரைத் தடுத்து அணை கட்ட எவ்வித ஆய்வும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் 1983–84ஆம் ஆண்டில் இப்பொருள் தொடர்பாக எந்தத் திட்டமும் ஆய்வு செய்யப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–00

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக மக்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் உயிர் உள்ள வரை நீங்காத இடத்தைப் பெற்ற என் உயிரினும் மேலான நான் வணங்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் ''இல்லை' என்ற சொல்லுக்கே ''இடம் இல்லை'' என்றிருந்தாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கான கருத்துரு ஆய்வில் இல்லை என்று சொல்லி

யிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் உள்ள மக்களின் நலன் கருதி இந்தத் திட்டத்தை எடுத்து அடுத்த ஆண்டிலாவது செயல்படுத்த வேண்டுமென்று கூறிக் கொண்டு நமது தமிழக மக்கள் கர்நாடகம் சென்று பிழைக்கக்கூடிய நிலையும், அவர்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதாலும், இந்த திட்டத்தை அரேப்பாளையத்தில் கட்டினால் அங்கு பல ஆயிரக்கணக்கான குடிமக்கள் வாழ வசதி ஏற்படும் என்பதால் இந்த அரசு அடுத்த ஆண்டிலாவது இத்திட்டத்தை எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரேப்பாளையத்திலிருந்து மேற்கு நோக்கி ஓடும் ஓடையில் மேலும் சில ஓடைகளை இணைத்த பின்னர் அதன் கீழ்ப் பகுதியில் கர்நாடக மாநிலத்தில் சொர்ண நதி நீர்த் திட்டம் அமைக்கப்பட்டது. இந்நீர்த்தேக்கத்திற்கு நீர்வரத்து அதிகம் வராத காரணத்தாலே சுமார் 7 ஆண்டுகள் ஆகியும் கூட நீர்த்தேக்கம் நிரம்பவில்லை. அதன் பின்னாலே அதையோட்டியே சிக்கோடு நீர்த்தேக்கத் திட்டத்திலிருந்து 3 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு ''லிங்க் சானல்'' வெட்டி, அதன் மூலம் தண்ணீர் கொண்டு வந்து அந்த நீர்த்தேக்கம் நிரப்பப்பட்டு, தண்ணீர் அளிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, நம்முடைய பகுதியிலே தண்ணீர் வரத்து அதிகம் இல்லாத காரணத்தாலே புதிய அணைத் திட்டம் ஏற்படுத்துகின்ற வாய்ப்பு ஆய்வு செய்யப்படவில்லை. இருப்பினும், உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அங்கு இருக்கின்ற நீர்வரத்துப் பகுதியினுடைய நிலைமையை அறிந்து, நம்முடைய பொதுப் பணித்துறை மூலம் ஆய்வு செய்யப்பட்டு, அந்தத் திட்டத்தினுடைய பலன் குறித்து ஆராய்ந்து அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 206, திரு. செ. ஆறுமுகம் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

206—

மயிலம்—பாண்டிச்சேரி இணைப்புச் சாலையை அகலப்படுத்துதல்

*3758 திரு. செ. ஆறுமுகம் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வானூர் தொகுதி, வானூர் வட்டத்தில் மயிலம்-பாண்டிச்சேரி இணைப்புச் சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?